**கவனிக்க** .- *2015.01.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1898 - 2015 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2015.01.16

*1898 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 60 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 63 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 64 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- அரசியலமைப்புக்கான இருபத்துமூன்றாவது திருத்தச் சட்டமூலம் 2014, நவெம்பர் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, பெப்புருவரி மாதம் 6 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

**இலங்கைப் புகையிரத சேவைகளுக்காக** 70 Nos. Axels with Wheels for Heavy Trolleys and 20 Nos. Axels with Wheels for Light Trolleys **ஆகியவற்றின் பெறுகை**

இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் Heavy Trolleys, Axels Pump Trolleys & Trolley Axels with Wheels ஆகியவற்றின் கொள்வனவிற்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை நேரடியாக அல்லது இலங்கையில் பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற அற்றோணித் தத்துவம் மூலம் தத்துவம் வழங்கப்பட்ட முகவரொருவரூடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து 2015.02.12 ஆந் திகதி இலங்கை நேரம் பி. ப. 3.00 மணிவரை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக இலங்கை நாணயத்தில் 2,500 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் சமமான பணத்தொகையைச் செலுத்துவதன் மூலம் பெறக்கூடிய படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் 2015.02.13 ஆந் திகதி இலங்கை நேரம் பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

4. Trolley Axels with Wheels ஆகியவற்றின் வடிவமைத்தல், உற்பத்தி மற்றும் வழங்கல் ஆகியவை ISO 9001:2008 சான்றிதழ் வழங்கப்பட்ட கம்பனிகளால் அல்லது கொள்வனவுகாரரினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகரான International Quality Management System Standard இனால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

5. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகளின் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,<br>
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),<br>
இலங்கைப் புகையிரத சேவைகள்,<br>
புகையிரத தலைமை அலுவலகம்,<br>
ஒல்கொட் மாவத்தை,<br>
கொழும்பு 10,<br>
இலங்கை.

6. விலைமனு கோரல் ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம் என்பதுடன், மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,<br>
ஒல்கட் மாவத்தை,<br>
கொழும்பு 10,<br>
இலங்கை.<br>
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328.

தவிசாளர்,<br>
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),<br>
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7078

1-412

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

### இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 600 எண்ணிக்கையிலான Solid Wheels களின் பெறுகை

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு, 600 எண்ணிக்கையிலான Solid Wheels களின் பெறுகைக்கு உற்பத்தியாளர்/வழங்குநர்களிடம் இருந்து கொழும்பு, ஒல்கொட் மாவத்தை, த. பெ. இல. 355, திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்கள் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர் அவர்களால் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட சான்றுறுதிப்படுத்திய முகவரொருவரின் ஊடாக அவர்களின் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2015.02.11 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. இலங்கைப் பணத்தில் 3,000 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் 2014.12.23 ஆந் திகதியிலிருந்து 2015.02.10 ஆந் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி. ப. 3.00 மணிக்கும் இடையில் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விலைமனு படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் திட்டவட்டமாகக் குறிக்கப்பட்ட நாட்களில் இலங்கைப் பணம் 3,000 ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டுப் பணத்தில் இலகுவில் மாற்றக்கூடிய தொகையை அவர்களின் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் செலுத்திய பின்னர், இலங்கையிலுள்ள தூதுவராலயத்தின் ஊடாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரை விலமனு ஆவணங்களை வழங்கும்படி கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள இலங்கைப் பணத்திலான மூவாயிரம் (3,000) ரூபாவானது (அல்லது இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டுப் பெறுமதியான) பணமானது மீளளிக்கப்படாததொன்றாகும்.

4. விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, இலங்கை புகையிரத சேவைகள் தலைமையக அலுவலகத்தில் மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அத்தாட்சிபெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :-

திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு கோரல் ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328.
தொலைநகல் இலக்கம் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
gmrslr@sltnet.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7204.

1-413

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

**Procurement of 02 Nos. Viscometer Baths and 02 Nos. Viscometer Tube Cleaners Procurement No. SRS/F.7190**

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு, 02 Viscometer Baths and 02 Viscometer Tube Cleaners ஆகியவற்றின் பெறுகைக்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் இலங்கை கூட்டிணைப்புச் சான்றிதழை வைத்திருப்பவர்களும் உற்பத்தியாளரினால் தராதர அங்கீகாரம்பெற்ற உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு, த. பெ. 355, புகையிரத தலைமை அலுவலகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்களின் விலைமனுக்களைத் தராதர அங்கீகாரம்பெற்ற அற்றோணித் தத்துவம் மூலம் தத்துவம் வழங்கப்பட்ட முகவரொருவர் மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2015, சனவரி 22 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 2,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் 2015, சனவரி 21 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே கொழும்பு 10, இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமையலுவலக அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,<br>
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),<br>
இலங்கைப் புகையிரத சேவைகள்,<br>
புகையிரத தலைமையலுவலகம்,<br>
ஒல்கொட் மாவத்தை,<br>
கொழும்பு 10.

6. விலைமனுக்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,<br>
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,<br>
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,<br>
கொழும்பு 10.<br>
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328.<br>
தொலைநகல் இலக்கம் : 94(11)2432044<br>
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com

தவிசாளர்,<br>
திணைக்களப் பெறுகைக் குழு,<br>
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7190.

1-414

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : அபெக்ஷா வூமன்ஸ் ஹெல்த் பவுண்டேஷன்*
*கம்பனி பதிவிலக்கம் : ஜீஏ 2998*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.12.22*
*பதிவு அலுவலகம் : இல. 1, 3 ஆவது குறுக்கு வீதி, பொருபன, இரத்மலானை*

*பினான்சியல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,*
*கம்பனிச் செயலாளர்கள்.*

*1-470*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : லங்கா பீச் ஹோட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 102657*
*கூட்டிணைக்கும் திகதி : 08.12.2014*
*கம்பனியின் பதிவு அலுவலகம் : இல. 84/1, பலங்கதுறை கிழக்கு, கொச்சிக்கடை*

*வர்ணகுலசூரிய விவியன் பர்னான்டோ,*
*கம்பனிப் பணிப்பாளர்.*

*1-397*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் நிலை மற்றும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் முன்னைய பெயர் : சியபத ஃபினான்ஸ் லிமிட்டெட்*
*கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி 917*
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 110, ஜேம்ஸ் பீரிஸ் ஒழுங்கை, கொழும்பு 2*
*கம்பனியின் தற்போதைய பெயர் : சியபத ஃபினான்ஸ் பீஎல்சி*
*தீர்மான நிலை/பெயர் மாற்ற திகதி : 2014, திசெம்பர் 31*

*ஆர். எல். எஸ். சேனாரத்ன,*
*கம்பனிச் செயலாளர்.*

*1-442*

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*நயினாதீவைச் சேர்ந்தவர்களும் தற்போது இல. 73-076-343* Denmark, Holste Brd, 7500, Thesvej 54 *என்ற முகவரியைச் சேர்ந்தவர்களுமான தனபாலசிங்கம் கலாதரன் மற்றும் ஜீவமணி கலாதரன் ஆகிய வழங்குநர்களாகிய நாங்கள் 1999.10.29 ஆந் திகதியிடப்பட்ட வெளிநாட்டு விசேட அற்றோணித் தத்துவத்தினாலும் பத்தரமுல்லை பதிவாளர் நாயக திணைக்களத்தின் 10055 ஆம் இலக்கமுடைய நாட்புத்தகத்தின்கீழ் 31 ஆம் பக்கத்தில் 205 ஆம் தொகுதியில் பதிவுசெய்யப்பட்டு கல்கிசை, புனித சில்வெஸ்ரர் வீதி, 35/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மருத்துவ கலாநிதி தியாகர் திருநாவுக்கரசு என்பவருக்கு அற்றோணித் தத்துவக்காரராக வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதென அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*தனபாலசிங்கம் கலாதரன் மற்றும் ஜீவமணி கலாதரன்.*

*1-439*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பீவீ 102313 ஆம் பதிவு இலக்கம் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட மதுக இன்டர்நஷனல் எடியுகேஷனல் சேர்விசெஸ் தனியார் கம்பனி 2014.11.21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டு 63 ஆம் இலக்க கொழும்பு வீதி, குருநாகல் எனும் இடத்தில் பதிவு அலுவலகம் நடாத்தப்பட்டு வருகின்றது.*

*ஜீ. எச். ஜீ. ஆர். சுரங்க பண்டார,*
*பணிப்பாளர்.*

*2014, திசெம்பர் 23.*

*1-363*

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

*இல. 227/டி, பராக்கிரம மாவத்தை, நீலம்மஹார, பொரலஸ்கமுவயில் வசிக்கும் டொனா ஸ்ரியா சாந்தினி அபேசிங்க எனும் நான், இத்தால் அறியத்தருவது யாதெனில், பொது நொத்தாரிசு லாலனி ஹெட்டிகே என்பவரால் உறுதிசெய்யப்பட்டு இல. 227/டி, பராக்கிரம மாவத்தை, நீலம்மஹார, பொரலஸ்கமுவயில் வசிக்கும் டொனா சந்திமா சாந்தினி அபேசிங்க என்பவருக்கு 1906 ஆம் இலக்கமிடப்பட்ட 2012.12.20 ஆந் திகதியிடப்பட்டு என்னால் கொடுக்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை 2015.01.01 ஆந் திகதியிலிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டேன். இனிமேல் மேற்சொன்ன டொனா சந்திமா சாந்தினி அபேசிங்கவினால் மேற்சொன்ன அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலமாக எனது சார்பில் செய்துகொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பில்லை என்பதை இத்தால் தெரியப்படுத்துகிறேன்.*

*டொனா ஸ்ரியா சாந்தினி அபேசிங்க.*

*1-468*

# ஏல விற்பனைகள்

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கேற்ப விற்பனை அறிவித்தல்*

***வட மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் பிரிவு-மன்னார் கிழக்கு, மன்னார் நகரத்தில் புறக்கோட்டையில் அமைந்துள்ள "லங்கென்பர்க வீடு வளவு" எனப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மற்றும் மட்டமாக்குநர் எம். சீ. எம். ராபிக்கால் தயாரிக்கப்பட்ட 2010, நவெம்பர் 4 ஆந் திகதியுடைய 2035 ஆம் இலக்க படவரைபுத் திட்டம் மூலம் அண்மையில் செய்யப்பட்ட மீள்அளவைத் திட்டத்தில் காணித் துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்ட திரட்டிய காணிப் பகுதி கொண்டுள்ள பரப்பளவு ஏழு தசம் சைபர் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 7.01பே.) அதிலுள்ள கடைக் கட்டிடத்துடன் சேர்ந்தது. 33, 33/01, 33/02, 33/03 மற்றும் 35ஏ ஆகிய மதிப்பீட்டு இலக்கங்களை உடையது.***

**மேலதிக விபரங்களுக்கு.**- *2014.09.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தலைப் பார்க்கவும்.*

*மன்னார் பிரசித்த நொத்தாரிசு எம். எம். சபுர்தீனால் உறுதிப் படுத்தப்பட்ட 10389 ஆம் இலக்கம் மற்றும் 2011.06.29 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி மூலம் இதிலுள்ள அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள், சொத்துக்கள் மற்றும் வளவுகளை மீராசாஹிப் அப்துல் ரஹீம் அல்லது மீராசஹிபு அப்துல் ரஹீம், அப்துல் ரஹீம் அஜ்மல்கான், அப்துல் ரஹீம் அம்ஜாதீன், அப்துல் ரஹீம் மொஹமட் அசர் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக அப்துல் ரஹீம் அல்லது மீராசஹிபு அப்துல் ரஹீம் ஈடுவைப்பாளராக கொழும்பு 3, காலி வீதி, 64 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயின் பெயருக்கு ஈடுவைத்து பிணையாக வைத்துள்ள ஈட்டுமுறி மூலம் பெற்றுக்கொண்ட வசதிகளின் பேரில் கொடுக்கவேண்டிய கொடுப்பனவைக் கூறப்பட்ட கடப்பாடு உடையவர்கள் கைவிட்டுள்ளனர். யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2015, பெப்புருவரி 5 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு மேற்கூறப்பட்ட சொத்துக்களை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் எம்மால் விற்பனை செய்யப்படும்.*

**ஆதனத்தை வந்தடைதல்.**- *மன்னார் யூனியன் வங்கியிலிருந்து தெற்குப் பக்கமாக பிரதான வீதி வழியே சுமார் 150 மீற்றர்கள் தூரம் சென்று பிரதான வீதியின் இடதுபக்கமாகவும் மன்னார் நகர சபை அலுவலகத்துக்கு முன்பாகவும் அமைந்துள்ள ஆதனத்தை வந்தடைய லாம்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- *வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை காசாக ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-*

*(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;*
*(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;*
*(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;*
*(4) விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு அறவீடுகள் நூறு வீதம் (100%) ;*
*(5) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;*
*(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.*

*விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி தொண்ணூறு வீதம் (90%) யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;*

*உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :*

*சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.*

*திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,*
*உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,*
*மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு*
*வர்த்தக உயர் நீதிமன்றம்,*
*மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,*
*அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 182, 3 ஆம் மாடி,*
*ஹல்ஸ்ரொப் வீதி,*
*கொழும்பு 12,*
*தொலைபேசி இல. : 077-3181891.*

*1-464*

---

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கேற்ப விற்பனை அறிவித்தல்*

***கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில், எருவில்பற்றுவில் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஈஸ்ரேண் சீற்ரன் எஸ்ரேற்/குறூப் எனப்படும் பிரிக்கப்பட்ட காணி பரப்பளவு ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) காணிப்பகுதி மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துப் பொருட்களுடன் சேர்ந்தது. இந்தக் காணி எச் 152/208 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

***மேற்கூறப்பட்ட அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ராஜேந்திரனால் வரைந்து தயாரிக்கப்பட்ட இல. ஆர்/ 010/ 2011 மற்றும் 2011.01.03 ஆந் திகதியிடப்பட்ட படவரைபுத் திட்டத்தில் கீழ்க்குறிப்பிட்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.***

**கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில், எருவில் பற்றுவில் மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச சபை எல்லைக்குள் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஈஸ்ரேண் சீற்ரன் என்னும் பெயருடைய பிரிக்கப்பட்ட காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ராஜேந்திர னால் வரைந்து தயாரிக்கப்பட்ட இல. ஆர்/010/2011 மற்றும் 2011.01.03 ஆந் திகதியிடப்பட்ட படவரைபில் காட்டப்பட்ட காணி பரப்பளவு ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) அல்லது 0.4047 ஹெக்டெயர் பரப்புள்ள காணி, கட்டிடங்கள் கிணறு மற்றும் அதற்குரிய அனைத்தும் பொருட்களுடன் சேர்ந்தது.**

மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு வீ. கனகரத்தினத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 5091 ஆம் இலக்கம் மற்றும் 2011.09.21 ஆந் திகதியுடைய பிரதான ஈட்டுமுறி மூலம் அதில் மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள், ஆதனத்தை அதைச் சேர்ந்த வரதராஜா ரோஹினி என்னும் நபர் கடப்பாடு உடையவராக/ஈடுவைப்பாளராக கொழும்பு 3, காலி வீதி, 64 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயின் பெயருக்கு ஈட்டுக்கான பிணையாக வைத்துள்ள ஈட்டுமுறி மூலம் பெற்ற வசதிகளுக்காக கொடுக்கவேண்டிய கொடுப்பனவு கூறப்பட்ட வரதராஜா ரோஹினியால் கைவிடப்பட்டதால் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2015, பெப்புருவரி 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மேற்கூறப்பட்ட சொத்துக்களை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் எம்மால் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- மட்டக்களப்பு யூனியன் வங்கியிலிருந்து திருகோணமலை வீதி வழியாக சுமார் 1/2 கிலோ மீற்றர் பயணம்செய்து இடதுபக்கம் உள்ள பார் வீதி மற்றும் கல்முனை வீதி வழியாக 26 கிலோ மீற்றர் பயணம் செய்து களுவாஞ்சிக்குடி நீர்ப்பாசனத் திணைக்களத்தைக் கடந்து பன்சலை வரை சென்று வலதுபக்கம் உள்ள கிரவல் பாதையில் சுமார் 30 மீற்றர்கள் சென்று சக்தி இல்லம் வீதிச் சந்திக்கு அருகில் உள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை காசாக ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு அறவீடுகள் நூறு வீதம் (100%) ;
(5) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி தொண்ணூறு வீதம் (90%) யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

1-465

---

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கேற்ப விற்பனை அறிவித்தல்

**வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரிவில் மல்லாகம் பற்றுவில் ஏழாலையில் அமைந்துள்ள காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. மகேந்திரனால் தயாரிக்கப்பட்ட 2011.04.23 ஆந் திகதியிடப்பட்ட 940 ஆம் இலக்க அளவைப்படத் திட்டத்தில் காட்டப்பட்ட கருகம்மனை அல்லது கருவேம்பன் சப்பிட்டியன் எனக் கூறப்பட்ட காணி கொண் 1Lm. V. C. 04.40 Kls கடைக் கட்டிடம் மற்றும் அதற்குரிய ஏனைய அனைத்துடனும் சேர்ந்தது. 2014.08.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தலைப் பார்க்கவும்.**

யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எஸ். சிவபாதத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 5194 ஆம் இலக்கம் மற்றும் 2011.08.15 ஆந் திகதியுடைய பிரதான ஈட்டுமுறியிலுள்ள அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள், சொத்துகள் மற்றும் வளவுகள், கதிரவேலு பாலரஞ்ஜன் மற்றும் பாலரஞ்ஜன் ததீஸ்வரி கடப்பாடு உடையவர்களாக கொழும்பு 3, காலி வீதி, இல. 64 இல் அமைந்துள்ள பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ பெயருக்கு ஈடுவைத்து பிணையாக வைத்துள்ள ஈட்டுமுறி மூலம் வழங்கப்பட்ட வசதிகளுக்காக கொடுக்கவேண்டிய கொடுப்பனவைச் செலுத்த கூறப்பட்ட கதிரவேலு பாலரஞ்ஜன் மற்றும் பாலரஞ்ஜன் ததீஸ்வரி ஆகியோர் தவறிவிட்டார்கள். யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2015, பெப்புருவரி 6 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கூறப்பட்ட சொத்துக்களை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் எம்மால் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- மல்லாகம் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக மல்லாகம் வீதி வழியே 0.50 கி. மீற்றர் பயணம் செய்து வல்லை வீதியை அடைந்து பின்னர் வல்லை வீதி வழியாக 250 மீற்றர்கள் சென்று சம்பந்தப்பட்ட ஆதனத்தை அடைய முடியும். அது வீதியின் வலதுகைப் பக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை காசாக ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு அறவீடுகள் நூறு வீதம் (100%) ;
(5) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி தொண்ணூறு வீதம் (90%) யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

1-466

---

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கேற்ப விற்பனை அறிவித்தல்*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை தொட்டமுனையின் பாணந்துறை-தல்பிட்டி தெபத்தவில் பாணந்துறை பிரதேச சபையின் கெசல்வத்தை உப அலுவலகப் பிரதேசத்தில் பாணந்துறை பிரிவுச் செயலாளர் பிரிவில் கொரக்கபொல 674 ஆம் இலக்க கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுக்குள் கொரகபொலவில் அமைந்துள்ள 275/53 ஆம் மதிப்பீட்டு இலக்கமுடைய ரட்டுவத்த, குருந்துவத்த, உளுகவத்த பவுல ஒவிட்ட மற்றும் மொரகஹவத்த அல்லது கோங்கஹவத்த ஆகியவற்றின் பிரிக்கப்பட்ட ஐந்தில் ஒரு பங்குள்ள பகுதி எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. எல். டி. பெர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 2002, செத்தெம்பர் 28 ஆந் திகதியுடைய 6401 ஆம் இலக்க அளவைப்பட வரைபுத்திட்டத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி கொண்டுள்ள பரப்பளவு முப்பத்தேழு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 37.90பே.) அல்லது 0.09589 ஹெக்டெயர் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்ந்தது. 2014.10.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தலைப் பார்க்கவும்.**

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். சீ. பீரிஸால் உறுதிப்படுத்தப்பட்ட 121 ஆம் இலக்கம் மற்றும் 2013, யூன் 20 ஆந் திகதியுடைய பிரதான ஈட்டுமுறிக்கேற்ப இதனுடன் உள்ள உப அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைச் சொத்துகள் மற்றும் வளவுகளை நம்முனி கமல் நிஸாந்த டி சொய்ஸா கடப்பாடுடையவர் என்ற வகையில் கொழும்பு 3, காலி வீதி, 64 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ பெயருக்கு ஈடுவைத்து பிணையாகக் கொடுத்துள்ள ஈட்டுமுறி மூலம் பெறப்பட்ட கூறப்பட்ட வசதிகளின் பேரில் கொடுக்கவேண்டிய கொடுப்பனவை கடப்பாடுடையவர் கைவிட்டுள்ளார்.

யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2015, பெப்புருவரி 12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கூறப்பட்ட சொத்துக்களை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் எம்மால் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பு கோட்டையிலிருந்து மொரட்டுவ நோக்கிப் பயணம்செய்து அங்கிருந்து பழைய காலி வீதி வழியாக கெசல்வத்தை பொலிஸ் நிலையம் வரை சென்று பின்னர் பழைய காலி வீதி வழியாக 23 ஆம் கி. மீ. போஸ்ட் வரை சென்று மேலும் அங்கிருந்து சுமார் 700 மீற்றர்கள் சென்று இடதுபக்கம் திரும்பி ஏ. எஸ். ஜீ. குறுப்பு மாவத்தை வழியாகச் சில மீற்றர்கள் சென்று குறித்த நிலையத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை காசாக ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு அறவீடுகள் நூறு வீதம் (100%) ;
(5) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி தொண்ணூறு வீதம் (90%) யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

1-467

---

## செலான் வங்கி பீஎல்சீ - கொழும்பு கோட்டை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

(''கடன்பட்டோர்'' என்ற வகையில் ஹோமாகமவில் பதிவு இல. என்(பீவீஎஸ்) 3781 இன்கீழ் 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய டீ. பி. விக்கிரமாராச்சி அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்டிற்காக டொன் பியசீலி விக்கிரமாராச்சிக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

### ஏலவிற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹேவாகம் கோரளை பல்லேபத்து ஹோமாகமவில் அமைந்துள்ள ''கொஸ்ஹகாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 4, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. பி. ஏ. ஜெயசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 1964.08.26 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2372 இல் துண்டு 4 எனக் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் மூன்று றூட்கள் (0ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2015, பெப்புருவரி 06 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- ஹோமாகம நகரத்திலிருந்து புகையிரத வீதி மார்க்கமாக சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள புகையிரத குறுக்குப் பாதையில் உள்ள ''பொல'' சந்தியின் இடதுபக்கமாக உள்ள அத்துருகிரிய வீதியால் சென்றால் சுமார் 700 மீற்றர் தூரத்தில் உள்ள ஹோமாகம மகா வித்தியாலயத்தைக் கடந்தபின் 2/2 சிறிய வாய்க்கால் பாலம் அமைந்திருக்கும். அதன் இடதுபுறத்தில் நகரசீம மாவத்தையில் கிளை வீதியினூடாக சுமார் 400 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலதுகைப்பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.02.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2013.02.18 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2013.02.15 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''சிரேஷ்ட பிரதி முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொ.பே. இல. 2456479, 2456481.

மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்.

துசித கருணாரத்ன (ச.நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 011-3068185, 2572940.

1-456

**சம்பத் வங்கி பீ எல் சீ**

*(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

*பலப்பிட்டிய ட்ரேடர்ஸ் - கணக்கு இல. 0035 1000 1345*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2005.05.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2005.10.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2005.10.03 ஆந் திகதிய "திவயின", "ஐலன்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கிணங்க நிலுவை முதலான, முப்பத்துநான்கு இலட்சத்து ஏழாயிரத்து ஐநூற்றைம்பத்திரண்டு ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 34,07,552.68) 2005, பெப்புருவரி 01 ஆந் திகதி முதல் பிணை உறுதி இல. 241 இன் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 25,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக 2012.04.01 ஆந் திகதி முதல் ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) இத்துடன் மேலும் பதினைந்து இலட்சத்து எழுபத்தேழாயிரத்து அறுநூற்றெண்பத்தாறு ரூபா பதினொரு சதம் (ரூ. 15,77,686.11) கட்டணத்திற்காக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டி யுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங் கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள் வதற்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான சொக்மன் அன்ட் சமரவிக்கிரம என்பவர் மூலமாக 2015.02.05 ஆந் திகதி லொட் இல. 1 வரைபட இல. 1432, மு. ப. 11.00 மணிக்கும், லொட் ஏ வரைபட இல. 1794, ந. ப. 12.00 மணிக்கும் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

*1. தென் மாகாணம், காலி மாவட்டம், வலல்லாவிட்ட கோரலே, பெந்தொட்டையில் பலபிட்டிய பிரதேச சபை எல்லைக்குள் வெலித்தரை பிராஹமனவத்த கிராமத்தில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 144 இல் "எட்டலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. ரீ. டி. எஸ். மனுக்குலசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, மாச்சு 1 ஆந் திகதியிடப்பட்ட இல. 1794 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : ஹெந்தஹேவா பேதிரிஸ் மற்றும் ஏனையோர் வசமான காணி மற்றும் மேற்கு : வெலபொட மாஹாவத்த எனும் கப்புகேவத்த ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொரு பேர்ச் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன் கண் அமைந்த அனைத்துமுடன் குறிப்பிடப்பட்ட 1794 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.*

*கூறப்பட்ட காணி கீழே குறிப்பிடப்பட்டவாறு மீள் அளவீடு செய்யப்பட்டது :-*

*மேற்கூறப்பட்ட வெலித்தரை பிராஹமனவத்த கிராமத்தில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 144 இல் எட்டலவத்த துண்டு 2 என்றழைக்கப்படும் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : அலகியதவடு சின்னப்புவிற்குச் சொந்தமான காணி ; கிழக்கு : பிரதான வீதி ; தெற்கு : ஹெந்தஹேவா பேதிரிஸ் மற்றும் ஏனையோர் வசமான காணி ; மற்றும் மேற்கு : வெலபொட மாஹாவத்த எனும் கப்புகேவத்த ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன் கண் அமைந்த அனைத்துமுடன் பலப்பிட்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் பி311/240 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. ரீ. டி. எஸ். சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001, மாச்சு 1 ஆந் திகதியிடப்பட்ட இல. 1794 எனும் வரைபடத்தைக் கொண்ட 1986, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். பந்துலரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 3804 எனும் முழு உரிமையுடைய உறுதியின் மூலம் உரிமம்கோரும் செய்யப்பட்ட பிணை உறுதி இல. 3804 இன்படி காலஞ்சென்ற இந்திரா டி சில்வா திருமணத்திற்கு முன் ரணவீர என்பவரிடமிருந்து முறையே திருமண மற்றும் பெற்றோர் வழி உரிமை சார்ந்தது மற்றும் அதன்கீழ் அனுபவித்து வந்த உரிமையாகும்.*

*2. மேற்கூறப்பட்ட வெலித்தரை பிராஹமனவத்த கிராமத்தில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 156 இல் "எட்டலவத்த" லொட் 8 ஒன்றிணைக்கப்பட்ட லொட் ஏ இன் உப பிரிவாக அறியப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. ரீ. டி. எஸ். மனுக்குலசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 1432 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : வெள்ளபொட மாஹாவத்த மற்றும் எட்டலவத்த ; கிழக்கு : காலி வீதி ; தெற்கு : பாலத்தருகில் அமைந்த மாஹாவத்தை ; மற்றும் மேற்கு : வெல்லபொட மாஹாவத்த எனும் கப்புகேவத்த ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தைந்து தசம் மூன்று ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 25.35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன் கண் அமைந்த அனைத்துமுடன் குறிப்பிடப்பட்ட இல. 1432 எனும் வரைபடத்திற்கு அமைவாக பலப்பிட்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் பி376/224 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*1-476*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.